<u>குளித்தலை நகராட்சி</u>

25.02.2022ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்–01. குளித்தலை நகராட்சி ஆணையர் திரு.ப.சுப்புராம் அவர்களின் ஜனவரி–2022.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–02. குளித்தலை நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி–2022.ஆம் மாதத்தின் தினசரி நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள்–03. குளித்தலை நகராட்சிக்கு 15வது நிதிக்குழு மான்யம் Untied Grant 2021–2022ம் ஆண்டிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் ரூ.11.50 லட்சத்திற்கு, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்கள், கழிப்பிடம் மராமத்துப் பணி செய்ய அனுமதி வழங்கியுள்ளார்கள். அதனைத் தொடர்ந்து மீதமுள்ள தொகை ரூ.13.50 லட்சத்திற்கும், 2020–2021ம் ஆண்டு 15வது நிதிக்குழுவில் அனுமதிக்கப்பட்ட தொகை ரூ.47.50 லட்சத்திற்கும் கீழ்க்கண்ட விவரப்படி பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

| **2020–2021ஆம் ஆண்டு Untied Grant:-** | | | |
|---|---|---|---|
| வ. எண். | பணிகள் விபரம் | தொகை ரூ. (லட்சத்தில்) | |
| 1) | குடிநீர் விநியோக குழாய் மராமத்துப் பணி | ரூ. | 8.00 |
| 2) | குடிநீர் வால்வுகள் மற்றும் தொட்டி கட்டுவது | ரூ. | 9.50 |
| 3) | பிள்ளைத் தோப்பு தெருவில் கான்கிரீட் சாலை அமைக்கும் பணி | ரூ. | 9.00 |
| 4) | மணத்தட்டை தெற்குதெருவில் வடிகால் வாய்க்கால் மராமத்து பணி | ரூ. | 8.00 |
| 5) | தார்சாலை மற்றும் கான்கிரீட் சாலை மராமத்துப் பணி | ரூ. | 8.00 |
| 6) | மணத்தட்டை தெற்கு தெருவில் கழிப்பிடம் மராமத்துப் பணி | ரூ. | 5.00 |
| | மொத்தம் | ரூ. | 47.50 |

| **2021–2022ஆம் ஆண்டு Untied Grant:-** | | | |
|---|---|---|---|
| வ. எண். | பணிகள் விபரம் | தொகை ரூ. (லட்சத்தில்) | |
| 1) | பழைய சுங்ககேட் அருகில் பொது கழிப்பிடம் மராமத்து | ரூ. | 3.50 |
| 2) | தெற்கு தேவதானம் தெருவில் கழிப்பிடம் மராமத்து பணி | ரூ. | 5.00 |
| 3) | பள்ளிவாசல் தெருவில் கழிப்பிடம் மராமத்து பணி | ரூ. | 5.00 |
| | மொத்தம் | ரூ. | 13.50 |

மேற்கண்டவாறு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிகள் செய்வதற்கும், அதன் எதிரே குறிப்பிட்ட தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1845/2021/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சிக்கு நகர்ப்புற ஏழைகளின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் ரூ.100.00 கோடி (ரூபாய் நூறு கோடி மட்டும்) மதிப்பீட்டில் நகர்ப்புற வேலை வாய்ப்புத் திட்டம் என்ற திட்டம், பெருநகர சென்னை மாநகராட்சியில் இரண்டு மண்டலங்களிலும், ஏனைய மாநகராட்சிகளில் தலா ஒரு மண்டலமும், 7 நகராட்சி நிர்வாக மண்டலங்களில் தலா ஒரு நகராட்சி என, 7 நகராட்சிகள் 37 மாவட்டங்களில் தலா ஒரு பேரூராட்சி வீதம் 37 பேரூராட்சிகளிலும் இத்திட்டம் இவ்வாண்டு செயல்படுத்தப்படும் என அரசு ஆணை (எம்.எஸ்) எண்.69, நாள்–13.09.2021ல் உத்தரவு வழங்கியுள்ளது. அதன்படி குளித்தலை நகராட்சிக்கு ரூ.150.00 லட்சம் (ரூபாய் நூற்று ஐம்பது லட்சம் மட்டும்) நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய பணிகள் வருமாறு.

| Sl. No. | Descripetion | Amount in Lakhs |
|---|---|---|
| 1 | Tree Plantation at Sathiyamangalam compost and Municipal Parks | 9.90 |
| 2 | Construction of Drain at Town Hall Street | 8.50 |
| 3 | Construction of Drain at Anna Nagar Pillaiyar Kovil East Street | 5.00 |
| 4 | Construction of Drain at Anna Nagar Pillaiyar Kovil Cross Street | 9.00 |
| 5 | Construction of Drain at Kamban Street | 4.30 |
| 6 | Construction of Drain at Cauvery Nagar Cross Street-1 | 8.00 |
| 7 | Construction of Drain at Cauvery Nagar Cross Street-2 | 7.10 |
| 8 | Deepaning for Chennal @ Pillai Thoppu Street to Malaiyappa Nagar Colony in Kulithalai Municipality | 10.00 |
| 9 | Deepaning for Chennal @ Malaiyappa Nagar in Kulithalai Municipality | 8.50 |
| 10 | Deepaning for Chennal @ Devadhanam Chennal in Kulithalai Municipality | 9.80 |
| 11 | Deepaning for Chennal @ Devadhanam to Manapparai Main road Chennal in Kulithalai Municipality | 8.40 |
| 12 | Deepaning for Pond @ Rethinagreeshwarar Temple pond in Kulithalai Municipality | 8.10 |
| 13 | Providing CC Paveement at Periyapalam to Pillai Thoppu Street Kulithalai Municipality. | 9.70 |
| 14 | Providing CC Pavement at Pillai Thoppu Street to Malaiyappa Nagar in Kulithalai Municipality. | 7.60 |
| 15 | Desilting for Chennal @ Pallivasal Street to Kandasamy Pillai Street in Kulithalai Municipality | 6.50 |
| 16 | Desilting for Chennal @ Vaishial Street to Old Court Street in Kulithalai Municipality | 5.60 |
| 17 | Desilting for Chennal @ Anna Nagar Bye Pass Road and Sowndeeshwari Amman Kovil Street in Kulithalai Municipality | 7.10 |
| 18 | Desilting for Chennal @ Karur Bye Pass Road to Malaiyappa Nagar Chennal in Kulithalai Municipality | 9.90 |
| 19 | Desilting for Chennal @ Old Toll gate street to N.G.G.O Colony in Kulithalai Municipality | 7.00 |
| | Total | 150.00 Lakhs. |

மேற்கண்ட பணிகள் செய்வதற்குரிய மதிப்பீடு தயார் செய்து, அதன் எதிரே குறிப்பிட்ட பணிகளுக்கான தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1574/2021/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி நகர்மன்ற (நிர்வாக) கூடம் தற்போது நகர்மன்றத் தலைவர், நகர்மன்ற துணைத் தலைவர் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள் வருகைதர இருப்பதால், நகர்மன்ற கூடம் அவசியம் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியுள்ளது. அதனால், நகர்மன்ற கூடத்தின் பழுதுகள் நீக்கம் செய்து வர்ணங்கள் பூசுதல், புதிதாக நாற்காலிகள் மற்றும் மேஜைகள் அமைக்கவும், ஆகும் உத்தேச செலவினம் ரூ.5.00 லட்சத்திற்கு (ரூபாய் ஐந்து லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்காணும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.72/2022/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சியின் வருவாய் மூலதன நிதி, குடிநீர் வடிகால் நிதி மற்றும் ஆரம்ப கல்வி நிதி ஆகியவற்றின் 2022–2023.ஆம் ஆண்டிற்கான வரவு–செலவு திட்ட மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.213/2022/பி1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5098 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிசான்று 24.02.2022.ல் முடிவடைவதால், அதனை புதுப்பிக்க பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு உதிரிபாகங்கள் மாற்றம் செய்யவேண்டி உள்ளது. அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான லெட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் நிறுவனத்தின்மூலம் பணி செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவின மதிப்பீடு ரூ.65,000/–த்திற்கு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.186/2022/எச்1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5109 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிசான்று 24.02.2022.ல் முடிவடைவதால், அதனை புதுப்பிக்க பராமரிப்பு பணிகள் மேற்கொண்டு உதிரிபாகங்கள் மாற்றம் செய்யவேண்டி உள்ளது. அரசு அங்கீகாரம் பெற்ற நிறுவனமான லெட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் நிறுவனத்தின்மூலம் பணி செய்வதற்கும், அதற்கான உத்தேச செலவின மதிப்பீடு ரூ.60,000/–த்திற்கு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– பழுதுநீக்கப் பணிகள் மேற்கொள்ளவும், அதற்கு ஆகும் செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.187/2022/எச்1)

பொருள்– 09. குளித்தலை நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN-47-X-0031 என்ற வாகனத்திற்கான தகுதி சான்று பெற வேண்டி, பழுது பணிகள் மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஜனதா ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், திருச்சி என்ற நிறுவனத்தின்மூலம் பணி மேற்கொள்ள குளித்தலை நகராட்சி மன்ற தீர்மானம் எண்.245, நாள்–15.09.2021ல் அனுமதியளிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட வாகனத்தின் பழுதுகள் நீக்கம் மற்றும் தகுதி சான்று பெறுவதற்கான செலவினத் தொகை ரூ.1,37,824/– ஆகும். மேலும், இவ்வாகனத்திற்கான கூடுதல் செலவினத்திற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் பின்னேற்பு கோருவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.937/2021/எச்1)

..4..

பொருள்– 10. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வீடுகளுக்கும் ஒரே சீரான குடிநீர் விநியோகம் செய்ய வேண்டும் என்றும், அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு வழங்க வேண்டும் என்றும் அரசு முடிவுசெய்து, மேற்கண்ட திட்டத்தை செயல்படுத்த, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.13277/2018/WS, நாள்–25.05.2018ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, இந்நகராட்சியில் 5500 குடிநீர் இணைப்புகள் வழங்க திட்ட மதிப்பீடு தயார் செய்து ரூ.192.00 இலட்சத்துக்கு தயார் செய்து, தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலம் வட்டியில்லா கடனாக வழங்க ஏற்பாடு செய்து அனுமதி வழங்கப்பட்டது.

மேற்கண்ட அனுமதியுடன் தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு வளர்ச்சி நிறுவனம் (TUFIDCO) மூலம் ரூ.162.93 இலட்சம் வட்டியில்லா கடனாக வழங்க அனுமதியளித்து அதற்குரிய ஒப்பந்தம் ஆணையர் அவர்களால் வழங்கப்பட்டது. மேற்படி ரூ.162.93 இலட்சத்தை திரும்ப செலுத்த்வும் உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்டது. இதன்படி, மேற்கண்ட பணி செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு முறையாக பணி ஆணை வழங்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஒப்பந்ததாரர்மூலம் 400 குடிநீர் இணைப்புகள் வழங்கப்பட்டது. மேற்கண்ட குடிநீர் இணைப்புகளுக்கு உரிய தொகை செலுத்துவதற்கு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்ட விவரம்.

| வ. எண். | விபரம் | தார் சாலை பகுதியாக இருப்பின் ரூ. | கான்கிரீட் சாலை பகுதியாக இருப்பின் ரூ. |
|---|---|---|---|
| 1) | முன் வைப்புத் தொகை | 4000.00 | 4000.00 |
| 2) | சாலை பராமரிப்பு கட்டணம் | 5131.00 | 5752.00 |
| 3) | ஒப்பந்ததாரர் ஒப்பந்தப்படி | 3460.00 | 3195.00 |
| 4) | GST 12% | 416.00 | 384.00 |
| | பத்து தவணைக்கான தொகை ரூ. | 13007.00 | 13331.00 |
| | ஒரு தவணை ரூ. | 1301.00 | 1333.00 |

மேற்கண்ட விவரப்படி ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் குழாய் இணைப்பு கட்டணமாக மேலே கண்டவாறு பத்து தவணையாக செலுத்தவும், ஆறு மாதத்திற்கு ஒரு தவணை வீதம் ஐந்து வருடங்களில் திரும்ப பெற்றுக்கொள்ளலாம் என்று மன்ற தீர்மானம் எண்.12, நாள்–31.01.2019ல் அனுமதிக்கப்பட்டுள்ளது.

தற்போது பொது மக்களுக்கு வழங்கப்பட்ட குடிநீர் குழாய் இணைப்புகளுக்கு தொகை செலுத்த கூறும்போது, எவரும் தொகை செலுத்த முன்வரவில்லை என்பதால், 400 குடிநீர் குழாய் இணைப்புகளுக்கும் வரி செலுத்தவும் இல்லை. கூடுதலாக இணைப்புகள் பெறுவதற்கு பொதுமக்கள் முன்வரவில்லை.

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில், முன்வைப்புத் தொகை மற்றும் இணைப்புக் கட்டணம் இவை இரண்டு மட்டும் சேர்த்துவரக்கூடிய தொகையை 10 தவணையாக பிரித்து குடிநீர் இணைப்பு வழங்க தெரிவித்துள்ளார்கள். அதன்படியான விபரம் வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1) | முன்வைப்புத் தொகை | ரூ. | 4000.00 |
| 2) | இணைப்புக் கட்டணம் | ரூ. | 3460.00 |
| | மொத்தம் | ரூ. | 7460.00 |

ஒரு தவணை தொகை ரூ.746.00 ஆறு மாதத்திற்கு ஒருமுறை செலுத்த தெரிவிக்கவும், ஏற்கனவே பொதுமக்களால் செலுத்திய தொகையை குடிநீர் கட்டணத்தில் ஈடுசெய்து கொள்ளவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2884/2019/இ1)

பொருள்– 11. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கிவரும் TN-47-AS-5370 என்ற எண்ணுள்ள வாகனத்திற்கு தகுதிச்சான்று பெறுவதற்கு பழுது நீக்கம் செய்ய நாள்–24.03.2022ல் விலைப்புள்ளி அறிவிப்பு கோரப்பட்டது. அதன் அடிப்படையில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | J.V.K.ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், சேலம்–9. | **126000.00** |
| 2) | லெட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் | **114965.00** |

அலுவலக குறிப்பு– **1).** மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள லெட்சுமி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ், மேட்டூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
**2).** இச்செலவினம் வருவாய் நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண்.118/2022/எச்1)**

பொருள்– 12. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட அரசு மருத்துவமனை வளாகத்தில் இயங்கிவரும் அம்மா உணவகத்தில் உள்ள மாவு அரைக்கும் இயந்திரங்கள் (Grinders) பொருத்தி 7 ஆண்டுகளாக பயன்படுத்தி வந்ததில், அவ்வப்போது பழுதுகள் ஏற்பட்டு மாவு அரைப்பதில் சிரமங்கள் ஏற்படுகிறது. எனவே, பொதுமக்களின் அத்தியாவசிய உணவுத் தேவைக்காக புதியதாக மாவு அரைக்கும் இயந்திரங்கள் (Grinders) 2(இரண்டு) எண்ணங்கள் திருச்சிராப்பள்ளி மங்கள் & மங்கள் நிறுவனத்தின்மூலம் வாங்கி பயன்படுத்திக்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,01,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1083/2014/டி2)

பொருள்– 13. குளித்தலை நகராட்சியில் குடிநீர் பிரிவு தொடர்பான நான்கு இனங்களிலான பணிகள் அவசர அவசியம் கருதி, தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் **1920** பிரிவு **15.**ன்கீழ் மேற்கொள்ளப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

| வ. எண். | பணிகள் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | மணத்தட்டை தெற்கு நடேசன் காலனி பகுதியில் பொதுக் குழாய் குடிநீர் தொட்டி அமைத்தல்–1 | **49308.00** |
| 2 | மணத்தட்டை தெற்கு நடேசன் காலனி பகுதியில் பொதுக் குழாய் குடிநீர் தொட்டி அமைத்தல்–2 | **49906.00** |
| 3 | மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தண்ணீர் திறக்கும் வால்வு, ராடு மற்றும் நட் கடைந்து பொருத்துதல் | **25000.00** |
| 4 | மணத்தட்டை பகுதியில் மெயின் குடிநீர் குழாய் அடைப்பு, பழுதடைந்த குழாய்கள் புதியதாக மாற்றி அமைத்தல் | **28000.00** |

மேற்கண்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும்.

அலுவலக குறிப்பு– பதிவு செய்யலாம்.
**(ந.க.எண்.2024/2021/இ1)**

*******

<u>குளித்தலை நகராட்சி</u>

25.02.2022.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 311 | பதிவு செய்யப்பட்டது. |
| 2 | 2 | 312 | பதிவு செய்யப்பட்டது. |
| 3 | 3 | 313 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 314 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 315 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 316 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 317 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 318 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 319 | அனுமதிக்கப்பட்டது. |
| 10 | 10 | 320 | அனுமதிக்கப்பட்டது. |
| 11 | 11 | 321 | அனுமதிக்கப்பட்டது. |
| 12 | 12 | 322 | அனுமதிக்கப்பட்டது. |
| 13 | 13 | 323 | அனுமதிக்கப்பட்டது. (பதிவுசெய்து). |

ஒம்/--ப.சுப்புராம்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.